# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 31 திங்கட்கிழமை (14.05.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 168


# இலங்கைக்கான உதவிகளை முடக்க மற்றும் பல வெளிநாடுகள் முஸ்தீபு!

## ஜப்பானும் சுவீடனும் தயாராகின்றன

கொழும்பு,மே14

இலங்கைத் தமிழர்களோடு அதிகாரத்தைப் பகிர்ந்து, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மறுத்து வருவதுடன், மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்துவதற்கும் தவறி வரும் கொழும்பு அரசுக்கு எதிராக - பூர்வாங்க நடவடிக்கையாக - அந்நாட்டுக்கான தமது உதவித் திட்டங்களை முடக்கும் நடவடிக்கைகளில் மேலும் பல வெளிநாடுகள் தயாராகி வருகின்றன என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜேர்மன், பிரிட்டன், அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகளைத் தொடர்ந்து ஜப்பான் மற்றும் சுவீடன் போன்ற நாடுகள் இத்தகைய செயற்பாட்டில் ஈடுபடவிருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் மோசமாக இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச மட்டத்தில் ஆழ்ந்த கரிசனையும், கவனிப்பும் இப்போது ஏற்பட்டிருக்கின்றது. தனது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மனித உரிமைகளை முழு அளவில் கொழும்பு அரசு பேணினால் மட்டுமே அதற்கு உதவிகளை அளிக்க வேண்டும் என மனித உரிமை விவகாரங்களில் அதிக ஈடுபாடுள்ள அமைப்புகள் சர்வதேச நாடுகளை வலியுறுத்திக் கேட்டுவருகின்றன.

மனித உரிமைகளைப் பேணும் பெறுபேறுகளுடன் உதவித் திட்டங்களைத் தொடர்புபடுத்த வேண்டும் என்ற மனித உரிமை ஆர்வலர்களின் இந்த அழுத்தத்தை ஏற்றுச் செயற்பட ஜப்பான் தயாராகி வருவதாக தமது பெயரினைக் குறிப்பிட விரும்பாத இராஜதந்திரி ஒருவர் கூறினார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் தரப்பில் முன்னணியில் - முதல் இடத்தில் - இருக்கும் ஜப்பான் இத்தகைய முடிவை எடுப்பது கொழும்புக்குப் பெரும் பின்னடைவான விவகாரம் என இராஜதந்திரிகள் சுட்டிக்காட்டுகின்ற னர்.

இந்த விடயத்தில் கூடுதல் பொறுப்புணர்வுடனும் கட்டுப்பாட்டுடனும் செயற்படும்படி அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) ஜப்பானைவலியுறுத்திக் கேட்டிருக்கின்றது. "மனித உரிமை மீறல்களுக்கு முடிவு

(06ஆம் பக்கம் பார்க்க)

## வல்வையில் நேற்றும் குண்டுவெடிப்பு

யாழ்ப்பாணம்,மே14

வல்வெட்டித்துறையில் நெடியகாடு தெணி வைரவர் கோயிலுக்குச் சமீபமாக நேற்றுக் காலை 9.45 மணியளவில் கிளைமோர் குண்டு ஒன்று வெடித்தது.

இக்குண்டுவெடிப்பினால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இக்குண்டுவெடிப்பையடுத்து அந்தப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம் பெற்றது. (அ-1-115)

## மட்டக்களப்பு அகதிகளை மீளக்குடியமர்த்தும் பணி இன்று ஆரம்பமாகிறது

கொழும்பு,மே14

மட்டக்களப்பு அகதிகள் இன்றுமுதல் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர். முதற் கட்டமாக வெல்லாவெளிப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சுமார் 30 ஆயிரம் பேரை இன்று முதல் இம்மாதம் 24 ஆம் திகதி வரை குடியமர்த்தி முடிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது..

(06ஆம் பக்கம் பார்க்க)

நான்கு கட்ட ஈழப்போர்களை விட அரசை உலுக்கியுள்ள புலிகளின் வான்தாக்குதல்!
கட்டுரைத் தொகுப்பு
☛ 5ஆம் பக்கத்தில்.

## இனப்பிரச்சினைத் தீர்வு

## ஐ.தே.கட்சி தனியான யோசனை எதனையும் முன்வைக்க மாட்டாது

### திஸ்ஸ விதாரணவின் திட்டத்தை ஆதரிக்குமாம்

கொழும்பு,மே14

தென்னிலங்கையின் இரண்டு பெரும் கட்சிகளில் ஒன்றும் பிரதான எதிர்க்கட்சியுமான ஐக்கிய தேசியக் கட்சி, இனப்பிரச்சினைத் தீர்வுக்கென தனியான யோசனை எதனையும் முன்வைக்கமாட்டாது.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தயாரித்துள்ள யோசனைகளை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கவுள்ளது.

பேராசிரியரின் தீர்வு யோசனை மாகாண மட்டத்திலான கூடுதல் அதிகாரப் பகிர்வை முக்கிய அம்சமாகக் கொண்டதாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்வு யோசனைகளை ஐக்கிய தேசியக் கட்சி அடியோடு நிராகரித்துள்ளது.

ஆளுங்கட்சியின் தீர்வு யோசனை மாவட்ட சபைகள் மட்டத்திலான அதிகாரப் பகிர்வு, கிராம இராச்சியங்கள், மேல் சபை(செனெட்) நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாகும்.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு இம்மாதக் கடைசியில் கூடி ஆராயவுள்ளது. (அ)

## இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அமெரிக்கா விசேட பிரதிநிதியை நியமிக்கும்?

வாஷிங்ரன்,மே14

இலங்கை விவகாரத்துக்கென, விசேட தூதுவர் ஒருவரை அமெரிக்க அரசாங்கம் விரைவில் நியமிக்கலாம். இதற்கான சாத்தியக்கூறுகள் நிறையவும் உண்டு என்று ராஜாங்கத் திணைக்கள வட்டாரங்கள் இங்கு தெரிவித்துள்ளன.

இலங்கை இனப்பிரச்சினையில், அதிக அளவில் பங்காற்றும் பொருட்டு விசேட தூதுவர் ஒருவரை நியமிப்பது அவசியமென அமெரிக்க ராஜாங்க வட்டாரங்கள் கருதுகின்றன.

இலங்கை அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்துவர வேண்டும் என்பதே எமது அக்கறையாகும். கடந்த பல வருடங்களாக பேச்சுக்கள் நடை

(06ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரான புத்த பிக்கு நேற்று திருமலையில் சுட்டுக்கொலை!

திருகோணமலை,மே 14

திருகோணமலையில் வசித்து வந்த பௌத்த பிக்கு ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அடையாளம் தெரியாத நபர்கள் இவரைச் சுட்டுக் கொலறனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர் என்றும் கூறப்படுகின்றது.

வண. சந்துண்கமுவ நந்தரட்ண தேரர் என்பவரே கொல்லப்பட்டவராவர். அவரது விகாரைக்குள் வைத்தே அவர் சுடப்பட்டுள்ளார் என்று அதிகாரிகள் தெரிவித் தனர்.

திருகோணமலை மாவட்டம் மொரவெவ செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிராமத்தில் உள்ள ஸ்ரீபஸ்பதாராம விகாரையின் விகாராதிபதியாகக் கடமையாற்றி வந்தார்.

தமிழராக இருந்து பௌத்தத்தைப் பின்பற்றி பௌத்த தேரராக மாறியவர் இவர் என்று அறியப்படுகின்றது என ரொய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்தது. இவரது கொலைக்கு எந்த ஓர் அமைப்பும் இது வரை உரிமை கோரவில்லை.

2 மோட்டார் சைக்கிள்களில் வந்த மூவர் இவரை அழைத்து சுட்டுக்கொன்றனர் என்று பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (சி)

## எரிபொருள்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கலாம்

கொழும்பு,மே14

கடந்த வெள்ளியன்றுதான் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. ஆனால் எரிபொருள்களின் விலைகள் மேலும் அதிகரிக்கப்படவேண்டிய நிலை ஏற்படலாம் என்கிறார் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அசந்தா டீ மெல்.

கடந்த வெள்ளிக்கிழமை எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து மின்சாரக் கட்டணம், பஸ் மற்றும் ரயில்வே கட்டணம், எல்.ஜி.சமையல் வாயுக் கட்டணம், பால் உணவு விலைகள் யாவும் உடனடியாக புதுக்கி நிர்ணயிக்கப்படவுள்ளன. பாலுணவு உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் பாற்பொருள்களின் விலைகளை உடனடியாக உயர்த்துவதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு விண்ணப்பித்துள்ளனர்.

மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்படுமானால் மேற்குறிப்பிட்ட பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிளுக்குமிடையில் நடக்கும் பிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தின் எதிர்விளைவே இந்த எரிபொருள் விலையேற்றம்.

கடந்த வெள்ளி இரவு அறிவிக்கப்பட்ட எரிபொருள் (06ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்கள் படுகொலை:

## இலங்கையின் மறுப்புக்கு இந்தியப் பதில் மௌனம்

புதுடில்லி, மே 14

கடந்த காலங்களில் தமிழக மீனவர்கள் படுகொலைகளில் இலங்கைக் கடற்படையினர் தொடர்புபட்டிருந்தனர் என்று புதுடில்லி தெரிவித்த கருத்துகளை மறுத்து இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட கருத்துகளுக்கு இந்திய அரசு தொடர்ந்து மௌனம் சாதித்து வருகின்றது.

இது விடயங்களைத் தெளிவுபடுத்துமாறு இலங்கை விடுத்த கோரிக்கைக்கு 48 மணிநேரத்திற்கு மேலாகியும் புதுடில்லி எந்தவிதமான பதிலையும் தெரிவிக்கவில்லை என்று ஹிந்துஸ்தான் ரைம்ஸ் நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

1991ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டில் இதுவரை இந்திய மீனவர்கள் 77 பேர் கொல்லப்பட்டமைக்கு இலங்கைக் கடற்படையே பொறுப்பு என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி

(06ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்க திறைசேரியிடம் நிதிவளம் இல்லை

### செயற்பாடுகள் முடங்கும் அபாயம்

கொழும்பு,மே 14

பல்கலைக்கழகங்களின் நிர்வாகச் செலவிற்கும் புதிய கட்டடங்களை நிறுவுவதற்கும் தேவையான நிதியை வழங்குவதற்கு திறைசேரி வசம் போதிய நிதி இல்லை என்றும், இதன் காரணமாக இன்னும் ஓரிரு மாதங்களில் பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகள் முடங்கி விடும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த நிலைமையைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபடத் தயாராகி வருகின்றனர்.

இது தொடர்பாக அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர் நிர்வாக சபையின் ஏற்பாட்டாளர் துமிந்த நாகமுவ உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், -

பல்கலைக்கழகங்களின் நிர்வாகச் செலவிற்காக இவ்வருடம் ஜனவரி மாதம் ஒதுக்கப்பட்ட நிதியில் 25 வீதம் குறைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நாம் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு நடத்தினோம்.

இந்த நிலையில் வெட்டப்பட்ட நிதி

(06ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனது வாடிக்கையாளர் சேவையை விரிவுபடுத்தும் முகமாக பிரதேசரீதியாக முகவர்களை நியமிக்கவுள்ளது.

18 வயதிற்கு மேற்பட்ட G.C.E O\L பரீட்சையில் கணிதம் உட்பட 6பாடங்களில் சித்தியடைந்த இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.


தகுதியானவர்கள் 18.05.2007 வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மணி முதல் பி.ப.2.00 மணிவரை யாழ். கிளையில் அல்லது நெல்லியடிக் கிளையில் நடைபெறும் நேர்முகத் தேர்வுக்குச் சமுகம் தரவும்.

வீரசிங்கம் மண்டபம்,
K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
TP: 021 222 2023

(60466)

பிரதான வீதி,
மக்கள் வங்கி முன்பாக,
நெல்லியடி.
TP: 0777 563781

## 31ஆம் நாள் நினைவுகூரல்



கைதடி மேற்கு, ஞானவயிரவர் ஆலயத்தின் நிர்வாகசபை உறுப்பினரும் ஆலயத்தின் வளர்ச்சிக்காக முன்னோடியாக உழைத்தவருமான சிவபதமடைந்த

**கணபதி ஜயங்கன் (சோலைமாமா)**

அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஞான வயிரவரை வேண்டுகின்றோம்.

ஆலய பரிபாலன சபை,
கைதடி மேற்கு.

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் தில்லைநாதன் விஜயநாதன்**
(ஓய்வுபெற்ற தபாலதிபர், சங்கானை)

அன்பும் பண்பும் நிறைந்த அமரர் தில்லைநாதன் விஜயநாதன் அவர்கள் சங்கானை தபாலகத்தில் பல ஆண்டுகள் கடமையாற்றி ஓய்வு பெற்று 11.05.2007 வெள்ளிக்கிழமை இந்தியாவில் சிவபதமடைந்ததையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ம.டெனிசியஸ்
(முன்னாள் தபால் அதிபர், சங்கானை)
தபால் அதிபர்களும் ஊழியர்களும்,

அஞ்சல் அலுவலகம்,
சங்கானை.

(60505)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக நண்பன் சி.கோபிகிஸ்ணா அவர்களின் அன்புத் தந்தை

**வை.சின்னத்துரை**

12.05.2007இல் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சகமாணவர்கள்,
யாழ்ப்பாணம்.

(60495)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
10 ★ 06 ★ 1946



ஆண்டவன் மடியில்
14 ★ 04 ★ 2007

**திருமதி இராசையா-தவமணிதேவி**

(மகாமணி)

ஐயாவின் நினைவிங்கு ஆறாய் நிலைத்திருக்க
அம்மா நீயுமேன் அவசரமாய் சென்றனையோ?

இன்று (14.05.2007) திங்கட்கிழமை காலை 6 மணிக்கு அல்வாய் சாமணந்தறை வைரவர் ஆலய முன்றிலில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அன்னார் நினைவாக வெளியிடப்படும் ''வெளிநாட்டுக் கதைகள்'' நூல் வெளியீட்டிலும் அதனைத் தொடர்ந்து எமதில்லத்தில் இடம்பெறும் சபிண்டிகரணத்திலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'ஐங்கரபதி'
மயிலிட்டி, அல்வாய்.

குடும்பத்தினர்.

(60508)

### கைதடியில் நேற்று சுற்றிவளைப்பு

கைதடிப் பிரதேசத்தில் நேற்று பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டது.

நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கை பிற்பகல்வரை தொடர்ந்தது.

பொதுமக்கள் அனைவரும் குருசாமி வித்தியாலயத்துக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். அதன் போது ஒருவர் கைது செய்யப்பட்டார். பலரது அடையாள அட்டைகளை பெற்றுக் கொண்ட இராணுவத்தினர் நாளை கைதடி இராணுவ முகாம் வந்து அவற்றை பெற்றுச் செல்லுமாறு கூறிச் சென்றுள்ளனர். (அ-202-75)

## 3ஆவது பிறந்த தின வாழ்த்து

**சிவானுஜன்**

14.05.2007

அளவெட்டி, பெருமாக்கடவை பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த இராஜேந்திர சர்மா - இரத்தினாம்பிகை தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**சிவானுஜன்**

தமது மூன்றாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் இன்று (14.05.2007) திங்கட்கிழமை சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, சகோதரிகள் பிரியங்கா, சாரங்கா, மதுரங்கா மற்றும் அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார் ஆகியோர் இறைவனருளால் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.



கோப்பாய். சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள் (தாத்தா)

(60503)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**பொன். கமலநாதன்**
(B.Com, PGDE, S.L.P.S. I)

அவர்கள் அதிபர் பணியில் இருந்து ஓய்வு பெறும் எங்கள் குடும்ப நண்பர் கமலநாதன் அவர்களின் ஓய்வு காலம் சிறப்புற அமைய மனமார வாழ்த்துகின்றோம்.

நாகநாதன் குடும்பம்
மில்லேன், பிரம்படி, கொக்குவில்.

## பதவி வெற்றிடம்

21 வருடங்களாக சிறந்த சேவை வழங்கும் யூனியன் அஸ்யூரன்ஸ் நிறுவனத்தில் காப்புறுதி பிரதிநிதிக்கான பதவிக்கு தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

பதவி: காப்புறுதி பிரதிநிதி
தகைமை:
க.பொ.த (சா/த) கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
சரளமாக உரையாடும் திறன்.
காலம்:
16.05.2007 புதன்கிழமை காலை 8.30 முதல் 12.30 மணி வரை
நேர்முகத் தேர்வு இடம்:

**யூனியன் அஸ்யூரன்ஸ்**
யாழ்.கிளை
139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3753, 0777 062549

## கணனி இயக்குநர் உடன் தேவை

* கணனி தட்டெழுத்தாளர்
* கணனி பக்க வடிவமைப்பாளர்

உடன் தேவை. நாளை (15.05.2007) காலை 9.30- 12. மணிக்கிடையில் நேரில் வரவும்.

ஞானம்ஸ் பிரிண்டர்ஸ்,237,கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

அளவெட்டி மேற்கு, அளவெட்டி என்னும் முகவரியைச் சேர்ந்த அமிர்தலிங்கம் அகிலதாசன் என்பவரது தேசிய அ.அட்டை (762414570V), விசேட அ.அட்டை (0907013165), சாரதி அனுமதிப்பத்திரம் (A012383520) மற்றும் முக்கிய ஆவணங்கள் 12.05.2007 சுன்னாகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மக்கள் வங்கி, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அல்லது 17.ஐயனார் கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(60512)

## பௌதிகவியல்/இணைந்த கணிதம்

**A/L 2008/2009**

பிரபல கல்லூரிகளில் கற்பித்து அனுபவம் பெற்ற ஆசிரியரினால் மேற்படி பாடங்கள் ஏராளமான பயிற்சிகளுடன் (20 வருட வினாத்தாள் உட்பட) M.C.Qக்குரிய விளக்க விடைகளுடன் கற்பிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். முழுப்பாடத்திட்டமும் குறுகிய காலத்தில் முடித்துக் கொடுக்கப்படும். ஏராளமான பயிற்சிப் புத்தகங்கள் விளக்க விடைகளுடன் உண்டு. வகுப்புகள் நடைபெறுகின்றன. பெற்றோர் மட்டும் சந்திப்பு 3 மணிக்குப் பின். 2007 மாணவர்களுக்கு தினசரி பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.

077 6648751

R.பாலசுப்பிரமணியம் B.Sc(Cey)Dip.in Edu.
42/1, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
[illegible]

## யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம் வருடாந்தப் பொதுக்கூட்டம்-2007

காலம்: 27.05.2007 ஞாயிறு பி.ப. 2.30 மணி
இடம்: விரிவுரையாளர் மண்டபம், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அனைத்து உறுப்பினர்களையும் தங்களது அங்கத்துவங்களைப் புதுப்பித்து, கூட்டத்தில் தவறாது சமுகளிக்குமாறு வேண்டுகின்றோம். புதிதாகச் சேரவிரும்புபவர்களும் அன்றைய தினம் இணைந்து கொள்ளலாம்.


கலாநிதி கி.விசாகரூபன்
பொதுச் செயலாளர்.

(60506)

பேராசிரியர் அ.சண்முகதாஸ்
தலைவர்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

மலர்வு
15 - 08 - 1933



உதிர்வு
15 - 04 - 2007

**அமரர் கந்தையா இராசையா**
(ஓய்வுபெற்ற இ.போ.ச. நடத்துநர்)

கடந்த 15.04.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.05.2007) திங்கட்கிழமை வில்லூன்றித் தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (15.05.2007) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

மனைவி,மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

(60421)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
28 - 12 - 1927



மறைவு
14 - 04 - 2007

**திருமதி கந்தையா தங்கரத்தினம்**

எங்கள் உள்ளமெல்லாம் உறையும்
பாசத்தோடும் பண்போடும் வளர்த்த எங்கள்
அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
கண்ணீர்ப் பூக்கொண்டு பிரார்த்திக்கின்றோம்.

கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(60474)

உங்கள் நினைவில் வாழ்கின்ற:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர் கொலை விவகாரத்தில் கூட்டுப்புலனாய்வுக்கு இலங்கை தயார்

கொழும்பு,மே14

இந்திய மீனவர்கள் - தமிழக மீனவர்கள்- இலங்கை கடற்படையினரால் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் விவகாரத்தை அடியோடு மறுத்திருக்கின்றது இலங்கை அரசு.

இந்திய மீனவர் விடயத்தில் கூட்டாகப் புலன் விசாரணைகளை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாகவும் இலங்கை அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடற்பரப்பில் மீன்பிடிக்கும் இந்திய மீனவர்கள் மீது நடைபெறும் தாக்குதல்களில் இலங்கை கடற்படையும் சம்பந்தப்பட்டுள்ளதாக இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி சில தினங்களுக்கு முன்னர் தெருவித்திருந்தார்.

இந்த விடய ம் தொடர்பாக வெளிவிவகார அமைச்சரின் செயலாளர் பாலித கோஹன்ன பி.பி.ஸிக்கு கருத்துத் தெரிவித்தார். அவர் இவ் விவகாரம் குறித்துக் கூறியதாவது-

இந்திய மீனவர்களின் நிலைமை என்ன என்பதை இரு அரசுகளும் புரிந்திருக்கின்றன.

இந்தக் கொலைகளுக்கு விடுதலைப் புலிகள்தான் காரணம் என்பதை தமிழ்நாட்டு காவல்துறைத் தலைவர் கூறியுள்ள விடயத்தை நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

அண்மையில் ஐந்து மீனவர்கள் கொலை செய்யப்பட்ட விடயம் குறித்தும் இந்திய காவல்துறைத் தலைவர் குறிப்பாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் 12 மீனவர்கள் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். ஆகவே இந்த விடயங்களுக்கு யார் காரணம் என்டது தெளிவாகக் கூறப்பட்டுள்ளதால் இங்கே சிக்கலுக்கு இடமிருக்காது என்றே நான் நினைக்கின்றேன்.

இந்திய மீனவர் விடயத்தில்கூட்டாக புலன் விசாரணை நடத்தத் தயாராக இருப்பதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது- என்றார் அவர். (அ-சி)

## நெடுந்தீவுப் பிரதேசத்தின் அபிவிருத்தி வேலைகளுக்கு ரூ.10 லட்சம் ஒதுக்கீடு

நல்லூர், மே 14

நெடுந்தீவுப் பிரதேசசபைக்கு பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கென 10 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது.

பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடையாக இந்த ஆண்டின் அபிவிருத் தித் திட்டங்களுக்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நூலக புத்தகங்கள் கொள்வனவுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் சிறு வர் பூங்கா அமைப்புக்கு 2இலட்சம் ரூபாவும் பொதுநூலகக் கட்டடப் புனரமைப்புக்கு 5 லட்சம் ரூபாவும் சந்தைக்கட்டடப் புனர மைப்பிற்கு 2 இலட்சம் ரூபாவும் ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது. (202-111)

# அழுகிய நிலையில் செம்மணி வயல்களில் கொட்டப்பட்டுக் கிடக்கும் உருளைக்கிழங்கு

யாழ்ப்பாணம்,மே 14

செம்மணி - முத்திரைச் சந்தி வீதியில் செம்மணி மயானத்துக்கு அருகிலுள்ள வயல்வெளியில் பெருந்தொகை - 300 கிலோவுக்கும் மேல் - உருளைக்கிழங்குகள் கொட்டப்பட்டுள்ளன. அழுகிய நிலையிலுள்ள இக்கிழங்குகளைக் கால்நடைகள் உண்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

குடாநாட்டு சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் ஒரு கிலோ உருளைக்கிழங்கு 120 ரூபாவுக்கு- கூடுதல் விலைக்கு - விற்பனை செய்யப்படுகின்றது. உருளைக்கிழங்குக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், பெருந்தொகை உருளைக் கிழங்குகள் அழுகிய நிலையில் கொட்டப்பட்டுள்ளதைக் காணும் பொதுமக்கள் விசனத்தை வெளியிடுகின்றனர்.

இந்த உருளைக்கிழங்குகளைத் தனியாரா அல்லது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளா இந்த இடத்தில் கொட்டியுள்ளனர் என்பது தெரியவரவில்லை.

இது கொள்ளை இலாபம் பெறுதவற்காகப் பதுக்கி வைத்திருந்தவையாக இருக்கலாம் என்ற கருத்து வெளியிடப்படுகின்றது.

இதேவேளை, சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சில கிளைகளில் பங்கீட்டுக்கு விற்பனை செய்யப்படும் உருளைக் கிழங்குகள் வெட்டப்பட்ட நிலையிலும் அழுகிய நிலையிலுமே காணப்படுகின்றன எனப் பாவனையாளர்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர். (202-51-207)

# குடாநாட்டில் சீரற்ற மின்வெட்டு: மாணவர்களின் கற்றல் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 14

குடாநாட்டில் தினமும் சீரற்ற முறையில் மின்சாரவெட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதனால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதுடன் ஏனைய பாவனையாளர்களும் பெரும் சிரமங்களுக்குள்ளாவதாகச் சுட்டிக் காட்டுகின்றனர்.


குடாநாட்டுக்கு மின்சாரத்தை விநியோகிப்பதற்கென ஒப்பந்தம் செய்துகொண்ட இரண்டு நிறுவனங்களினதும் ஒப்பந்த காலம் முடிவடைய இருப்பதைத் தொடர்ந்து அவை பணியை முடித்துக்கொள்ள இருக்கின்றன.

எனினும் மனிதாபிமான அடிப்படையில் தற்போது மின்சாரத்தை வழங்கி வருகின்றன.

இந்நிலையில் மின்சார சபை ஒரு குறிப்பிட்ட நேர சூசிகை அடிப்படையில் பிரதேசங்களுக்கு மின்துண்டிப்பு தொடர்பாக அறிவுறுத்தல் எதனையும் வெளியிடாது சில பகுதிகளுக்கு தொடர்ந்து மின் வழங்கியும் சில பகுதிகளுக்கு நீண்ட நேரம் மின்சாரத்தைத் துண்டித்தும் வருகின்றது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு இன்னமும் சில மாதங்களே இருக்கும் நிலையில் முன் அறிவித்தல் இன்றி மின்விநியோகத்தில் நிலவும் ஒழுங்கீனம் காரணமாக குறிப்பிட்ட சில இடங்களில் உள்ள மாணவர்கள் பெரும் பாதிப்படைவதாக முறையிடுகின்றனர்.

மின்சாரம் எந்தெந்தப் பகுதிக்கு, எந்தெந்த நாளில், எத்தனை மணிநேரம் துண்டிக்கப்படும் என்பதை முன்னரே அறிவிப்பது நன்மையளிக்கும் என்று பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். (202-68)



ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அனுசரணையுடன் திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் யாழ்.மாவட்டத்தில் வாழைச் செய்கை அபிவிருத்தி தொடர்பாக பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது. பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) சி.சிவகுமார் தலைமையில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்: நம்பி)

## சதுரக் கோடு கொப்பிகளுக்குத் தட்டுப்பாடு

குருநகர், மே 14

யாழ்ப்பாணத்தில் சதுரக் கோட்டு (Square Rule) கொப்பிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒற்றைக் கோட்டு கொப்பிகள் போதியளவில் கிடைத்த போதிலும் சதுரக் கோட்டுக் கொப்பிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இக்கொப்பிகளை கைவசம் வைத்துள்ள வியாபாரிகள் விலையை உயர்த்தி விற்பனை செய்து வருகிறார்கள் என்று மாணவர்களும் பெற்றோர்களும் கவலை தெரிவிக்கின்றனர். இதேவேளை அதிக விலைகொடுத்து வாங்கும் தாள்கள் பழுப்பு நிறமடைந்து காணப்படுகின்றன. (1-51)

# ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் கலை, இலக்கியப் போட்டியில் வெற்றியீட்டியோர்

யாழ்ப்பாணம், மே 14

தேசிய கலை இலக்கிய விழாவை ஒட்டி பிரதேச செயலகங்கள் ரீதியாகவும் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.

ஊர்காவற்றுறை உதவி அரச அரச அதிபர் பிரிவில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**கட்டுரை**

**கனிஷ்ட பிரிவு**- ம.சிவதரன் (புனித அந்தோனியார் கல்லூரி), ந.ஆன்நவசா (நாரந்தனை றோ.க.வித்தி.), மு.நிலானி (சிறிய புஸ்பம் மகளிர் ம.வித்தி.)

**சிரேஷ்ட பிரிவு**- ச.பானுஸா(சிறிய புஸ்பம் மகளிர் ம.வித்தி.),றொ.மரினா மியுரின் (சிறிய புஸ்பம் மகளிர் ம.வித்தி.), ந.துவாரகா (சண்முகநாத ம.வித்தி.)

**திறந்தபிரிவு**- திருமதி வ.கஜநந்தினி (சிறிய புஸ்பம் மகளிர் ம.வித்தி.), தி.ஞானேஸ்வரி (சண்முகநாத ம.வித்தி.), ஜே.ஏ.அலிஸ்ரன் நியுமன்(புனித அந்தோனியார் கல்லூரி)

**கவிதை**

**கனிஷ்ட பிரிவு**- யே.வெரோணிக்கா (புனித மரியாள் றோ.க.ம.வித்தி), தே.தேவதர்சன் (புனித அந்தோனியார் கல்லூரி), தே.டொரஸ்ரா (சிறிய புஸ்பம் மகளிர் ம. வித்தி.),

**சிரேஷ்ட பிரிவு**-யே.அன்ரன் கஜன்(புனித அந்தோனியார் கல்லூரி), யோ.மேரி பூவதனி (சிறிய புஸ்பம் மகளிர் ம.வித்தி.), ப.அன்சலின் சுஜிவா(புனித மரியாள் றோ.க.ம. வித்தி.)

**திறந்த பிரிவு**- ச.அருட்செல்வன்(புனித அந்தோனியார் கல்லூரி), தி.ஞானேஸ்வரி (சண்முகநாத ம.வித்தி.), யே.றெமின்ரன் (புனித அந்தோனியார் கல்லூரி)

**சிறுகதை**

**கனிஷ்டபிரிவு**-ம.கௌதமி(சிறிய புஸ்பம் மகளிர் ம.வித்தி.),தே.டொறஸ்ரா(சிறிய புஸ்பம் மகளிர் ம.வித்தி.),யே.மேரி லிண்டா(சிறிய புஸ்பம் மகளிர் ம.வித்தி.)

**சிரேஷ்டபிரிவு**-பு.சிந்துஜா(சிறிய புஸ்பம் மகளிர் ம.வித்தி.),யோ.யோன்சி(சிறிய புஸ்பம் மகளிர் ம.வித்தி.), ம.சோபிகா (சிறிய புஸ்பம் மகளிர் ம.வித்தி.)

**திறந்தபிரிவு**-சு.அருட்செல்வம்(புனித அந்தோனியார் கல்லூரி), திருமதி வ.கஜநந்தினி(சிறிய புஸ்பம் மகளிர் ம.வித்தி.), தி.ஞானேஸ்வரி(சண்முகநாத ம.வித்தி.)

**பாடல் எழுதுதல்**

திறந்தபிரிவு- திருமதி வ.கஜநந்தினி (சிறிய புஸ்பம் மகளிர் ம.வித்தி.). (202)

## கரவெட்டி விக்னேஸ்வராவில் சமூகக் கற்கை நிலையம்

வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் சமூகக் கற்கை நிலையம் ஒன்று கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம் தலைமையில் ஆரம்ப விழா நிகழ்வுகள் நடைபெற்றன.

# சட்டக்கல்லூரி அனுமதியில் தமிழ் மாணவர்களுக்கு அநீதி

## அமைச்சர் ஜெயராஜ் குற்றச்சாட்டு

சட்டக்கல்லூரிக்கு மாணவர்களைச் சேர்க்கும்போது தமிழ் மாணவர்களுக்குப் பெரும் அநீதிகள் விளைவிக்கப்பட்டுள்ளன. நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் தன்னிச்சையான செயற்பாடுகளே இதற்குக் காரணம் என ஆளும்கட்சிக் கொறடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் குற்றம் சாட்டினார்.

எந்த ஓர் ஆணைக்குழுவும் நாடாளு மன்றத்திற்குக் கட்டுப்பட்டதாக இருக்கவேண்டும். அதற்கேற்ப சட்டம் அமைக்கப்பட வேண்டும். அரசமைப்பில் திருத்தம் கொண்டு வரும்போது இதுவும் உள்ளடக்கப்பட வேண்டும்'' என ஐ.தே.க. கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா கூறினார்.

இதற்குப் பதிலளித்த ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே: -உறுப்பினரின் ஆலோசனையை நான் ஏற்றுக்கொள்கிறேன். நீதிச் சேவைகள் ஆணைக்குழு மிகவும் சுயாதீனமாகவும் அதேவேளை தன்னிச்சையாகவும் செயற்படு கின்றது. அண்மையில் சட்டக்கல்லூரிக்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டபோது நூறு சிங்களவர்கள் என்றால் இரண்டுபேர் மட் டுமே தமிழ் மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகும். இதனை நாம் கேட்டால் எங்களுடைய விடயத்தில் யாரும் தலையிட முடியாது என்கின்றனர். இதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்-எனத் தெரிவித்தார்.

# வவுனியாவில் உள்ள வாகன இலக்கத் தகடுகளை யாழ்ப்பாணம் எடுத்துவர நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 13

வவுனியா மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் ஒருதொகுதி இலக்கத் தகடு கள் உள்ளன.அந்த இலக்கங்களை உடைய வாகனங்களின் உரிமையாளர்கள் யாழ். செயலகத்தில் இயங்கும் யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டால் இலக்கத் தகடுகள் பெற்றுக் கொடுக்கப்படும் என்று உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

வாகன உரிமையாளர்களை வாகன பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் வருகைதருமாறு அவர் கேட்டுள்ளார்.

இலக்கத் தகடுகளின் இலக்கங்கள் வருமாறு:-

**NPGN- 1103, 1110, 4182, 4185, 4198, 6593, 6602, 6638, [illegible], 9713, 9751, 9789, 9792, 9794.**

**NPHG- 0597, 0694, 0747, 0776.**

**NPHO- 3978, 4113, 4156.**

**NPGU- 5783, 5645, 5673, 5730.**

**NPGM- 0515, 0548, 0591, 0621, 0622, 0623.**

**NPGJ- 4666.**

**NPHZ- 2814.**

**NPGZ- 4827.**

**NPHH- 1509, 1506.**

**NPGP- 4430, 4438, 4447,4455,4460.**

**NPGI- 5732.**

**NPHI- 6573, 6604, 6637, 6698.**

**NPHD- 6558, 6414.**

**NPHA-5955, 5995, 6012, 6013, 6014, 6015, 6017, 6144.**

**NPGO- 8373, 8398, 8420, 8429, 8433, 8461, 8475, 8481, 8501, 8509, 8510, 8531, 8540.**

**NPGQ- 0952, 0988, 1034, 1043, 1124, 1125, 1134, 9312, 9321, 9330, 9337, 9347, 9364, 9371, 9379, 9382, 9395, 9410, 9417, 9429, 9436, 9437, 9462, 9464, 9468, 9471, 9483, 9485, 9500.**

**NPHT- 5016, 5031.**

**NPHK-3963, 4052, 4071, 4084, 4146.**

**NPHC- 2319, 3184, 3274, 3489, 3504, 3548.**

**NPHE- 7206, 7208, 7220, 7281, 7289, 7300, 7336, 7352, 7364.**

**NPGW- 5383, 5417, 5481, 5600,**

**NPHW- 3745.**

**NPGS- 8928, 8932, 8934, 8943, 8990, 9008, 9015, 9034, 9036, 9037.**

**NPGP- 4307, 4365, 4374, 4388, 4472, 4473, 4479, 4483.**

**NPGR- 8231, 8820, 9047, 9087, 9093, 9102, 9116, 9184.**

(202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

**சண்முகம் வீரசிங்கம்**

(ச.நீ. அரச மொழிபெயர்ப்பாளர், ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் - கல்வி வலயம், வலிகாமம் பிரதேச செயலகம் - கோப்பாய் பிரதேச செயலகம்- தென்மராட்சி)

செந்தண்மை கொண்ட செயல் வீரரே
பூ மழை தூவிவிடும் புன்னகை முகத்தோனே
நற்பணிகள் பல செய்து நின்ற நாயகரே - போற்றியே
உன் பூதவுடலுக்கு பூ மலராய் அஞ்சலிக்கின்றோம்.

*தலைமகன் தனையிழந்து பரிதவித்து நிற்கும் குடும்பத்தவர்கள் துயரமதில் நாமும் பங்கேற்கின்றோம்.*

S.R.கட்டட ஒப்பந்தக்காரர்,
கைதடி வடக்கு, கைதடி.

(60473)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சாரதா சத்தியநேசன்

*(முன்னாள் முகாமையாளர் - சர்வோதய சிறுவர் பாடசாலை)*



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாரதா சத்தியநேசன் 09.05.2007 இல் காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம்- ஜெயமணி தம்பதியரின் அன்பு மகளும் சத்தியநேசனின் அருமை மனைவியும் தேவசங்கர், சுமனா ஆகியோரின் தாயும் சுகுமாரன், ஜெயகுமாரன், சுகுணா, மஞ்சுளா, மோகனா, வசுந்தரா, பாலகுமார் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியின் டொட்முண்ட் நகரில் இன்று (14.05.2007) திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சுப்பிரமணியம் சுகுமாரன்.

நாமகள் லேன்,
கொக்குவில்.

(60489)

### கிருஸ்ணன் தனபாலன்



சித்திரமேழி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணன் தனபாலன் 09.05.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணன்- செல்லம்மா தம்பதியரின் மூத்த மகனும் விமலாதேவியின் (மானிப்பாய்) கணவரும் சந்திரமோகன் (லண்டன்), சரோஜினிதேவி ஆகியோரின் உடன் பிறந்த அண்ணரும் லக்சி, வேணுகா (கனடா) ஆகியோரின் தந்தையும் வித்தியாதரன் (கனடா), சுரேஸ் (கனடா) ஆகியோரின் மாமனும் சாகினி, கிருஷாந், துசானிஜினி ஆகியோரின் மாமனும் அபிசாவின் தாத்தாவுமாவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை நாளை (15.05.2007) செவ்வாய்க்கிழமை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உடுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
லக்சி (மகள்)

பிரதான வீதி,
இளவாலை.

(60496)


கல்பேட், ஊர்க்கோழிகள் உடன்தேவை

அதி கூடிய விலையில்
கொள்வனவு செய்யப்படும்.
**158/4, தாசன் பாம்**
*கோயில் வீதி, யாழ்ப்பாணம்.*
(I.C.R.C சந்திக்கும் கைலாசபதி கோயிலுக்குமிடையில்)

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், உணவுப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள், உடுபுடைவைகள் மற்றும் VDO பிரதிகள், CDக்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

**திருமுருகன் கொம் நெற்**
259,கே. கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. : 7835 46,அடியபாதம் வீதி,
திருநெல்வேலி. தொ.பே: 7310

**சென்றல் நேசிங் ஹோம்**

சேவை வசதிகள்
1.வெளிநோயாளர் சேவை (இரவு/பகல் சேவை)
2.தங்கிச் சிகிச்சை பெறும் வசதி (இரவு/பகல் சேவை)
3.சத்திர சிகிச்சை வசதிகள்
4.ஆய்வுகூட வசதிகள்
5.ஈ.சி.ஜி (E.C.G), Ultra Sound Scanning வசதி
6.கர்ப்பிணிகள்/ பெண்ணோயியல் கிளினிக் வசதி
7.ஏனைய நிபுணத்துவ ஆலோசனை சேவைகள்
8.லப்ரஸ்கோப் சத்திர சிகிச்சைச் சேவைகள்
9.அம்புலன்ஸ் சேவை

விபரங்களுக்கு நேரடியாகவோ தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

350, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

தொலைபேசி:
021 222 2265


## கண்ணீர் அஞ்சலி

எமது சபையில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **நா.தவராஜசேகரன்** அவர்களின் அன்பு மனைவி திருமதி

**த.செந்தாமரைச்செல்வி**

11.05.2007 காலமானதால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஊர்காவற்துறை பிரதேச சபை ஊழியர் நலன்புரிச் சங்கம்.*


வசீகர தோற்றத்திற்கு

**சந்தனாலேப**

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)




யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
**'சிவா நறுமணப் பூங்கா'**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone: 222 2567

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

880 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

விருச்சிகம்

**20 33 47 50**

**11-05-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 5890100 - 5904021

ஜக்பொட் பரிசு ரூபா. 1,688,050/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 304,842 | 10/- | 3,048,420/- |
| 2 இலக்கங்கள் | 27,958 | 20/- | 559,160/- |
| 1 இல. + லக்கினம் | 27,689 | 30/- | 830,670/- |
| 2 இல. + லக்கினம் | 2,594 | 100/- | 259,400/- |
| 3 இலக்கங்கள் | 752 | 500/- | 376,000/- |
| 3 இல. + லக்கினம் | 61 | 5,000/- | 305,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,688,050/- | |
| மொத்தம் | | | 5,778,650/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 363,905 | | 6,802,150/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,368,700/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| புத்தளம் | 5894677-4-78 |
| அம்பாறை | 5893796-3-37 |
| கொழும்பு | 5900569-7-84 |
| கொழும்பு | 5901564-2-18 |
| மொனராகலை | 5894942-9-52 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## நினைவலைகள்

*10 ஆம் ஆண்டு* *3 ஆம் ஆண்டு*



அமரர் **N.S.நாகலிங்கம்**
(முகவர், எரிபொருள் நிரப்பு நிலையம், தெல்லிப்பழை,சுன்னாகம்)



அமரர் **தங்கமுத்தம்மா நாகலிங்கம்**
(பிரபல செங்கண்மாரி வைத்தியர், தெல்லிப்பழை)

**திதி:14.05.2007**

அன்புத் தெய்வங்களே!
உங்கள் வழிகாட்டலிலே, உங்கள் நினைவுகளோடு,
உங்களை வணங்கி வாழ்ந்துவரும் எங்களுக்குத்
தொடர்ந்தும் உங்கள் நல்லாசி வேண்டி நிற்கின்றோம்.

செல்லாச்சி அம்மையார் வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(60458)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
24
*
10
*
1957



உதிர்வு
25
*
04
*
2006

திதி: அபரபக்க திரயோதசி

**இ.து.சிவராசா (J.P)**

(செயலாளர் - பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, தலைவர்-சிவசக்தி மணிமண்டபம்-ஆவரங்கால், தலைவர்- பழைய மாணவர் சங்கம், யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்)

பாசவிளை நிலங்கள் பாரில் தவித்து இருக்க
ஈசனருள் நாடியேகிய ஆண்டொன்று இந்நாள்
வாசமல ரெடுத்து வழுத்திநிதம் துதித்து
காசில் நல்வழிக்காய் கைதொழுது நிற்கின்றோம்.

பூசுதிரு நீறும்புகழ் நினைமுக மலர்வும்
நேசநல் மனையாய்த் திகழவே வைத்ததையா
மாசில் சிவ ராசமாணிக்க விளக்கே நீர்
நேசநட ராசராம லிங்கத்தடி வாழியவே.

சிவன் வீதி, ஆவரங்கால்,
புத்தூர்.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# போர்வெறிப் போக்கால் பொருளாதாரச் சீரழிவு!

மீண்டும் ஒரு தடவை - கடந்த வெள்ளிக்கிழமையன்று - சத்தம் சந்தடியின்றி எரிபொருள்களின் விலையைக் கூட்டியிருக்கின்றது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

ஆறு வார காலத்துக்குள் மூன்றாவது எரிபொருள் விலை அதிகரிப்பு இது.

இது மாத்திரம் அல்ல. எரிபொருள் விவகாரத்தில் இன்னும் விலை அதிகரிப்புகள் வரிசையாக வருவதற்குக் காத்திருக்கின்றன என்ற குண்டையும் தூக்கிப் போட்டிருக்கின்றார் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் அஸந்த டி மெல்.

மோசமடைந்து, அதலபாதாளத்துக்குள் வீழ்ந்து கொண்டிருக்கும் இலங்கைத் தீவின் பொருளாதார நிலைவரத்தால் தொடர்ச் சங்கிலி நிகழ்வுகளாக இன்னும் பல மோசமான பின்னடைவுகள் இடம்பெறப் போகின்றன என்பதை பொருளியல் நிபுணர்கள் முன்கூட்டியே எச்சரித்து அறிவித்து விட்டனர்.

ஏற்கனவே ஏற்பட்ட எரிபொருள் விலை அதிகரிப்பின் விளைவாக போக்குவரத்துச் சேவை (பஸ், ரயில், ஓட்டோ) கட்டணங்கள் அதிகரிப்பு, எரிவாயுக்களின் விலை உயர்வு, பால்மா போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் என்பன வரிசையாக இடம்பெறத் தொடங்கிவிட்டன. ஏற்கனவே உச்சத்தைத் தொட்டு நிற்கும் மின்சாரக் கட்டணமும் இந்த எரிபொருள் விலை அதிகரிப்பை அடுத்து மீண்டும் எகிறப் போகின்றது என உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒருபுறம் அந்நிய முதலீடுகளில் பெரு வீழ்ச்சி. பங்குச் சந்தையில் பணப்புழக்கம் சரிவு. சந்தைப் பெறுமதி இடறி வீழ்ந்துகொண்டிருக்கிறது.

மறுபுறத்தில் வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிரான ரூபாவின் பெறுமதியும் ஒரேயடியாகக் கவிழ்ந்து வருகின்றது.

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற சமயத்தில் ஓர் அமெரிக்க டொலருக்கு இலங்கைப் பணம் நூறு ரூபா சமனாகவிருந்தது. இன்றோ ஓர் அமெரிக்க டொலருக்கு சமனான இலங்கைப் பணம் நூற்றிப்பதினொரு ரூபா என்றாகிவிட்டது.

இலங்கைப் பணத்தின் பெறுமதி தொடர்ந்து சரிந்து வருவதால், உலகச் சந்தையில் தான் கொள்வனவு செய்யும் எரிபொருளை உள்ளூர்ப் பணத்தில் விற்பனை செய்யும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு உள்ளூரில் அதன் விலையை அதிகரிப்பதைத் தவிர வேறு என்ன தான் மார்க்கம்?

எரிபொருளின் விலை அதிகரிப்பு, அதன் தொடர் நிகழ்வாக, அடுத்து எல்லா அம்சங்களிலும் - அனைத்துப் பொருள்களிலும் - எல்லா சேவைகளிலும் - தாக்கத்தை ஏற்படுத்தி, அவற்றின் கட்டணங்களையும் அதிகரிக்கச் செய்யப்போகின்றது. அதன் விளைவாக வாழ்க்கைச் செலவு கட்டுமட்டில்லாத அளவுக்கு மேலும் எகிறும் ஏது நிலைகள் தென்படுகின்றன.

எரிபொருள் விலை அதிகரிப்பால் ஏற்பட்டு வரும் இழப்புகளுக்கு உரிய மானியத்தை வழங்குவதற்கு அரசு முன்வராவிட்டால் அடுத்தமாத முற்பகுதியிலிருந்து மின்சாரக்கட்டணத்தை உயர்த்துவதைத் தவிர வேறு மார்க்கம் ஏதுமில்லை என்று இலங்கை மின்சார சபையும் திட்டவட்டமாக அறிவித்து விட்டது.

நாட்டின் பொருளாதாரம் இவ்வாறு மோசமாகப் படுத்து வருவதற்குக் காரணம் என்ன?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசின் திமிர்த்தனமான அரசியல், இராணுவ அணுகுமுறைகளும், அவற்றால் ஏற்பட்ட விபரீத விளைவுகளுமே நாட்டின் இத்தகைய மோசமான பொருளாதார நெருக்கடிக்குப் பிரதான காரணங்களாகும்.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினையை அமைதி வழியில் - சமாதான முறைகளில் - சமரச இணக்கத்தின் மூலம் - தீர்த்துவைக்கும் விருப்பமோ, மனத் தாராளமோ, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையோ இல்லாத மஹிந்தரின் அரசு, போரியல் போக்குமூலம் - இராணுவ நடவடிக்கைகள் மூலம் - விவகாரத்தை, தீர்த்து, தனது எதேச்சாதிகாரத்தை நிலைநிறுத்த கங்கணம் கட்டி நிற்பதே இத்தகைய இக்கட்டு நிலைமை உருவாகப் பிரதான காரணமாகும்.

மஹிந்த அரசின் இராணுவத் தீவிர வெறிப்போக்கை நிறைவு செய்வதற்காக நாட்டின் பொருளாதார வளம் இராணுவச் செலவினத்துக்குப் பெருமளவில் திருப்பி விடப்படுகின்றது.

இந்தப் போக்கின் விளைவாக போர் வெடித்து, நாடு போரழிவுகளையும்,பேரிழப்புகளையும் சந்திப்பது ஒருபுறம் அரங்கேற, மறுபுறம் உற்பத்திகள் பாதிக்கப்பட்டு, வாழ்வியல் கட்டமைப்புகள் சிதைந்து, சமூகக் கட்டுமானங்கள் உடைந்து, பிராந்திய அபிவிருத்தி சீர்குலைந்து, பொருளாதாரம் சீரழிந்து பெரும் பின்னடைவுகள் நேருகின்றன.

அமைதி வழித் தீர்வுக்கான வாய்ப்புகளை அரசின் போரியல் போக்கு உதாசீனம் செய்து புற மொதுக்குவதால், சர்வதேச உதவிகளையும் இழக்கும் அவ லத்துக்கு அரசு தள்ளப்பட்டிருக்கின்றது.

இராணுவ வழித் தீர்வில் அரசு சன்னதம் கொண்டு விடாப்பிடியாக நிற்பதால் வெளிநாட்டு முதலீடுகளையும் நாடு இழந்து வருகின்றது. உள்ளூர் மூல வளங்களும் யுத்தத்தால் முடங்க, நாட்டின் பொருளாதாரம் மீண்டெழவே முடியாத பள்ளத்துக்குள் சரிந்து கொண்டிருக்கின்றது.

இந்த இக்கட்டைப் புரிந்து கொண்டு - தம்மை சுதாகரித்துக் கொண்டு - நிலைமையைப் விளங்கிக் கொண்டு - விவகாரத்தைத் திருத்தியமைக்க இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இது நல்ல சந்தர்ப்பம்; இறுதிச் சந்தர்ப்பம்

அவரது போக்கிலும், அவரது அரசின் போக்கிலும் மாற்றம் வருமா? திருத்தம் ஏற்படுமா ? திருந்தினால் அவருக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது. திருந்தாவிட்டால் விளைவுகளை அவரும் நாடும் அனுபவிக்க வேண்டி நேருவது தவிர்க்கப்படமுடியாததாக இருக்கும்.

# மிக் விமானங்களைக் கொள்வனவு செய்யாது குத்தகைக்கு பெறுவதற்கு இப்போது முடிவு

**புகழ்பெற்ற பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழில் எழுதும் கள நிலைமை என்ற தமது பத்தியில் இம்மாதம் 13ஆம் திகதி எழுதிய ஆய்வுக் கட்டுரையின் தொகுப்பு இது.**

நான்கு கட்டங்களாக நாட்டில் பிரிவினைவாதப் போர்கள் இடம்பெற்று விட்டன. கடைசிப் போர் தற்பொழுது இடம்பெற்றுவரும் பிரகடனப்படுத்தப்படாத நான்காவது ஈழப்போராகும். இந்தப் போர்களைவிட கடந்த ஒரு மாத காலத்துக்குள் புலிகள் அமைப்பு நான்கு தடவைகள் விமானத் தாக்குதல்களை நடத்தியிருப்பதானது நாட்டின் தற்காப்பு மற்றும் பாதுகாப்பு அமைப்புகளில் அதிக அச்சத்தையும் கவலையையும் தோற்றுவித்துள்ளது. பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் இரா ணுவ, கடற்படை, விமானப்படை மற்றும் பொலீஸ் தலைவர்களைக் கொண்ட தேசிய மட்ட மாநாடுகளில் விடுதலைப் புலிகளின் விமானப்படை அச்சுறுத்தல் தொடர்பாகவே அதிகமாக ஆராயப்பட்டு வருகிறது.

### புலிகள் திடீர் தாக்குதல் நடத்தலாம்

ஏப்ரல் 29ஆம் திகதி அதிகாலை வேளையில் கடைசியாக இடம்பெற்ற விமானத் தாக்குதலை அடுத்து வான் பரப்பில் அமைதி நிலவியபோதிலும் மேலும் அதிக திடீர் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்பதை அலட்சியப்படுத்திவிட முடியாது என்று பல்வேறு புலனாய்வு அமைப்புகளும் ஒத்த கருத்துடையனவாகவே உள்ளன.

எதிர்த்தாக்குதல்கள் முழுமையாக மேற்கொள்ளப்படுவதற்கு முன்பதாக புலிகள் மேலும் பல இலக்குகளைத் தாக்கும் திட்டங்களைப் பூர்த்திசெய்து விட முனைவார்கள் என்று அஞ்சப்படுகிறது.

இவ்வாறு பெரிய தாக்குதல் எதுவும் இடம்பெறுவதற்கு முன்னர் உடனடியாக சில தற்காப்பு நடவடிக்கைகளை பாதுகாப்புப் படையினரும் பொலீஸாரும் எடுத்து வருகிறார்கள். இந்தவகையில் இந்தியா வழங்கியுள்ள ராடர் கருவிகளையும் ஏனைய சாதனங்களையும் இந்திய நிபுணர் குழுவொன்று இலங்கை வந்து சீர்செய்துள்ளது.

விமானத் தாக்குதல்களையும் உள்ளடக்கிய இப்போதைய போர் ஏற்கனவே உல்லாசப் பயணிகள் வருகையை வெகுவாகப் பாதித்துள்ளது. சர்வதேச விமான நிலையத்தை இரவு 10.30 மணியிலிருந்து காலை 4 மணி மணிவரை மூடிவிடுவது என்ற புத்திசாதுர்யமற்ற முடிவு நிலைமையை, மேலும் மோசமடையச் செய்துள்ளது.

நாட்டுக்கு மிக அதிகமாக அந்நியச் செலாவணியைத் தேடித்தரும் தேயிலைத் தொழில்துறை வெளிநாடுகளுக்கு தேயிலை மாதிரிகளை அனுப்புவதில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குவதாக கூறப்படுகின்றது. அதேபோல மலர்கள் மற்றும் ஆடை ஏற்றுமதியாளர்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இவர்களின் பொதிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் ஏற்படும் தாமதம் காரணமாக வெளிநாடுகளிலிருந்து வரும் வர்த்தகக் கோரிக்கைகள் ரத்துச் செய்யப்படும் நிலைமை உருவாகியுள்ளது.

### அரசின் பலவீன நிலைமை

அரசாங்கம் தனது விமான நிலையத்தை - குறைந்தது அதன் விமான நிலைய வான்பரப்பையாகுதல் - பாதுகாத்துக்கொள்ளும் நிலையில் இல்லை என்பதை விமான நிலையத்தை இரவில் மூடுவதன் மூலம் வெளிப்படையாக ஒப்புக்கொள்வதைக் காட்டுவதாக உள்ளது. இது எமது மெதுவாக நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழிக்கும் நிலைக்குத் தள்ளிக் கொண்டிருக்கின்றது. உல்லாசப் பயணிகளின் வரவு தடைப்பட்டதால் விமான நிலையத்தை அண்டியுள்ள ஹோட்டல்களில் வியாபாரம் முடங்கிப்போய் விட்டது. வாடகைக்கார் ஓட்டுநர்களும் தொழில் இழந்து வருகின்றார்கள்.

### புதிதாக வருகை தரும் சாரார்

இருந்தபோதிலும் இலங்கைக்கு வருகைதரும் இன்னொரு சாரார் மட்டும் இப்பொழுது அதிகரித்துக் காணப்படுகின்றார்கள். இவர்கள் யார் தெரியுமா? பல்வேறு வகையான ராடர்கள், செயற்கைக் கோள்கள் மூலம் கண்காணிப்புச் செய்யும் அமைப்புகள் போன்று விமானத் தாக்குதல்களைச் சமாளிக்கும் இன்னோரன்ன பொருள்களின் விற்பனை முகவர்களே இப்பொழுது எப்போதும் இல்லாதவாறு அதிக எண்ணிக்கையில் வருகிறார்கள். இவர்களில் சிலர் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பையும் பெற்றுள்ளனர். இன்னும் சிலர் தமது கொழும்பு முகவர்கள் மூலமும் வேறு உள்ளூர் தொடர்புகள் மூலமும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.



மிக் 29

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இலங்கை படைக்கலங்கள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் அமைக்கப்பட்டதன் பின்னர் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்பக் கருவிகள் உபகரணங்களை விற்பனை செய்யும் முகவர் அமைப்புகள் செயலற்றுப்போய் இருந்தன.

முற்றிலும் அரசுக்குச் சொந்தமான படைக்கலங்கள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தலைமையில் நிறுவப்பட்டுள்ளது. இலங்கை பாதுகாப்புப் படைகளுக்கும் பொலீஸ் திணைக்களத்துக்கும் .கருவிகள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் முழுப் பொறுப்பும் இந்த நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் பணிப்பாளர் சபையில் திறைச் சேரிச் செயலாளர் டாக்டர் பி.பி.ஜயசுந்தர, முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலீஸ் மா அதிபர் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

இந்த நிறுவனத்தை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி ராஜபக்ஷ அமைச்சரவைக்கு விளக்கமளித்தபோது இதனால் இரண்டு நன்மைகள் கிடைக்கும் என்று தெரிவித்தார்.

முதலாவது - இதன் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் நாட்டின் பணம் பெருமளவில் மிச்சமாகும்.

இரண்டாவது - கடந்த காலத்தில் பல்வேறு வட்டாரங்களாலும் பொதுமக்களாலும் கண்டனத்துக்குள்ளான விசாலமான கொள்வனவுகளின் போது வெளிப்படைத் தன்மையை உறுதி செய்து கொள்ளமுடியும்.

வெளிநாட்டிலுள்ள தூதரகங்கள் படைகளுக்குத் தேவையான எல்லாவித கொள்வனவுகளையும் இந்த நிறுவனத்தின் ஊடாகவே மேற்கொள்ளவேண்டும் [illegible]ணிக்கப்பட்டுள்ளன.

எதுவானாலும், முகவர் அமைப்புகள் செயற்படாவிட்டாலும், எங்கே யார், எது, எதனைக் கொள்வனவு செய்கிறார்கள், அவைகளின் விலைகள் என்பன போன்ற விடயங்களை எல்லாம் அறிந்து வைத்திருக்கும் கூட்டங்களுக்கும் குறைவில்லை. பெரிய ஹோட்டல் விடுதிகளில் மட்டுமல்ல அதற்கு வெளியிலும் தகவல்கள் கசிந்துவிடுகின்றன.

## இதுவரையான நான்கு கட்ட ஈழப்போரை விடவும் புலிகளின் வான் தாக்குதல் அரசை உலுக்கியுள்ளது

**★ தமிழீழ விடுதலைப் புலிகள் மேலும் அதிக விமானத் தாக்குதல்களை நடத்துவார்கள் என்ற அச்சத்தில் பாதுகாப்பு அதிகாரிகள் அவசரமான எதிர் நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து வருகிறார்கள்.**

**★ இலட்சக்கணக்கான ரூபா பணத்தை முதலீடு செய்து மிக் 29 ரக விமானங்களைக் கொள்முதல் செய்வதானது மாட்டு வண்டில்களை தகர்த்தெறிவதற்கு புதிய மெர்சிடிஸ் பென்ஸ் கார்களை விலைகொடுத்து வாங்குவது போலாகும் என்கிறார்கள் நிபுணர்கள்.**

**★ போர்ச் செலவுகள் அதிகரிக்கும் அதேவேளை, உல்லாசப் பயணிகளின் வரவு வீழ்ச்சிகண்டுள்ளது. எனினும் இலங்கைக்கு உலக ஆயுத வியாபாரிகள் வந்து குவிகிறார்கள்.**

### 'புதினம்' முதலில் வெளியிட்ட தகவல்

விடுதலைப் புலிகளுக்குச் சார்பான இணையத்தளமான 'புதினம்' இணை யத்தளமே முதன் முதலில் அரசாங் கம் மிக் 29 ரக விமானங்களை வாட கைக்கு கொள்வனவு செய்ய உத்தே சித்துள்ளது என்ற தகவலை வெளி யிட்டது.

மொஸ்கோவுக்குச் சென்று மிக் 29 ரக விமானங்களைக் கொள்வனவு செய்ய விருந்த குழுவின் பயணம் பிற்போடப்பட்டுவிட்டது. இதற்கான சரியான காரணம் தெரியவில்லை. எனினும் விமானப்படை பொறியியல்துறைப் பணிப்பாளர் ஏயர்வைஸ் மார்ஷல் பிரிஷாந்த சில்வா இந்த வாரம் உக்ரேனுக்குச் சென்று இரண்டு மிக் 29 விமானங்களைக் குத்தகைக்கு அமர்த்திக் கொள்வதற்கான சாத்தியங்களை ஆராயவிருக்கின்றார்.

மிக் 29 விமானங்களைச் செலுத்தும் திறன் இலங்கை விமான ஓட்டிகளுக்கு இல்லாமையால் அவர்கள் உரிய தகுதி பெறும்வரை உக்ரேனிலிருந்து விமான ஓட்டிகளையும் ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்ள முயற்சிக்கப்படும் என்று தெரியவருகின்றது.

### புலிகளைச் சமாளிக்க மிக் 29 உகந்ததா?

விடுதலைப் புலிகளின் விமானப் படை அச்சுறுத்தலை எதிர்கொண்டு சமாளிப்பதற்கு மிக் 29 விமானங்கள் முழுமையான பயனைத் தரக்கூடியவைதானா என்பதில் விமானப் படை அதிகாரிகள் நம்பிக்கை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

தம்மை அடையாளம் காட்ட விரும்பாத விமானி ஒருவர் பின்வருமாறு கூறு கிறார் -

இது மாட்டுவண்டில் ஒன்றை புத்தம் புதிய மெர்சிடிஸ் பென்ஸ் கார் கொண்டு முட்டி விழுத்துவது போலாகும்.

மிக் 29 விமானங்கள் அதே ரகத்திலான விமானங்களுடன் ஆகாயத்தில் போரிடுவதற்காகவே தயாரிக்கப்பட்டவை. யுத்த விமானங்கள் அல்லாத இலகு ரக விமானங்களைத் தாக்குவதற்கு உல கில் வேறு எங்குமே அது பயன்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

மிக் 29 விமானங்கள் வேகமாகப் பறந்து வானில் போரிடக்கூடியவை. புலிகளிடம் அந்த ரகத்திலான போர் விமானங்கள் அல்ல. அதிக பட்சம் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட இலக்குகள் மீது உள்ளூரில் தயாரித்த குண்டுகளை அவர்களால் போடமுடியும். மற்றும் விரக்தியடைந்த நிலையில் தற்கொலைத் தாக்குதல்களுக்கும் இந்த விமானங்களை அவர்களால் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் ஆனால் விண்ணில் நம்முன் பறந்து போரிடும் நிலையில் அவர்கள் இல்லை. - என்றார் அவர்.

**தொகுப்பு : நந்தன்**

புலிகளின் வான்படை அச்சுறுத்தலை நீக்குவதற்கு இன்னும் மலிவான அதிக வலுவுள்ள பொறிமுறைகளைக் கையாள்வது பற்றி அதிகாரிகள் ஆலோசிக்கின்றனர். புலிகளின் இப்போதைய இலகு ரக விமானங்களை எதிர்ப்பதற்கு மட்டுமன்றி எதிர்காலத்தில் அவர்கள் மிக நவீன விமானங்களைப் பயன்படுத்தும் பட்சத்தில் மிக் 29 விமானங்கள் பயனுள்ளவையாக இருக்கும் என்று வேறு சிலர் கருதுகிறார்கள்.

அண்மையில் வன்னியில் படையினரிடம் சரணடைந்த நான்கு புலி உறுப்பினர்களை விசாரித்ததன் மூலம் புலிகளின் வான்படை நிலைமை குறித்து பல விவரங்களைப் படையினர் தெரிந்துகொண்டுள்ளனர்.

சரணடைந்தவர்கள் புதிதாக அமைக்கப்பட்ட சாள்ஸ் அன்ரனி மற்றும் ராதா பிரிவுகளைச் சேர்ந்தவர்களாம். விடுதலைப் புலிகளின் விமானப்படைக் கட்டமைப்பு மற்றும் விவரங்களை அதிகாரிகள் இவர்களிடமிருந்து சேகரித்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது. விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு முறைகள் குறித்தும் அவர்களிடம் தகவல்களைப் பெறக்கூடியதாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

மேலும் அதிக விமானத்தாக்குதல்களை புலிகள் நடத்தும் பட்சத்தில் எதிர்கொள்வதற்கான சகல ஏற்பாடுகளும் இப்போது அரச தரப்பில் செய்யப்பட்டு வருகிறது. ✱

## நாளை

| | |
|---|---|
| வைகாசி - 1 | செவ்வாய்க்கிழமை 15.05.2007 |
| திதி: திரயோதசி | காலை : 06.19 |
| நட்சத்திரம்: | அச்சுவினி முன்னிரவு : 06.46 |
| சுபநேரம் | : 10.23 - 11.54 |
| ராகுகாலம் | : 02.53 - 04.23 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகதி முகாம்களில் இருந்து அகதிகளை அவர்களது சொந்த இடங்களுக்கு அழைத்துச் செல்ல இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 17 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

குடியமர்த்தப்படும் பகுதிகளில் வீடுகள் சேதமடைந்திருப்பின் அவ் வீடுகளுக்குப் பதிலாக தற்காலிக கூடாரங்கள் வழங்கப்படும் என்றும் பிறகு மதிப்பீடு செய்து வீடுகள் திருத்திக் கொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

இதனைத் தொடர்ந்து பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவு மக்களை உடனடியாகக் குடியேற்ற நடவடிக்கை மேற் கொள்ளுமாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ப. அரிய நேத்திரன் மீள் குடியேற்ற அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (சி)

## எரிபொருள்களின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலை உயர்வு ஆறு வாரங்களில் இது மூன்றாவது தடைவையான தாகும். போரின் உக்கிரத்தன்மையால் பொருள்களின் விலை அதிகரிக்கப்படுவதுடன் அரசாங்கத்தின் வருமானமும் பெரும் வீழ்ச்சி கண்டுவருகின்றது.

அமெரிக்க டொலருக்கு ஒப்பிடுகை யில் இலங்கை ரூபாவின் மதிப்பு 111 ரூபா வாக நேற்றுமுன்தினம் காணப்பட்டது. எதிர்வரும் வாரங்களில் இந்தப் பெறுமானம் மேலும் உயரலாம் என்கிறார்கள் நிதிநிலை ஆய்வாளர்கள். (அ-ப)

## பல்கலை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக ஒதுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்ற நிதி கூட ஜனவரி முதல் இன்னும் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் மேலும் நிதி வெட்டப் பட்டுள்ளது.

தற்போது பல்கலைக்கழகங்களின் நிர்வாக செலவிற்கோ அல்லது நிர்மாண வேலைகளுக்கோ நிதி இல்லை. இதனால் இன்னும் ஓரிரு மாதங்களில் பல்கலைக்கழகங்களை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை எதிர்த்து நாம் போராட்டங்களை நடத்துவதற்குத் தயாராகி வருகின்றோம். - என்றார். (சி)

# மரண அறிவித்தல்கள்

### திருமதி பாக்கியம் துரை

மட்டுவில் தெற்கு, வாகையடி வீதியை பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொக்குவில் மேற்கு, மணியர்பதி வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் துரை நேற்று (13.05.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா துரையின் (பிரபல வர்த்தகர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரிமளம், அன்னபூரணம், ராஜசுந்தரம் மற்றும் தெய்வேந்திரம் (முன்னாள் சாரதி, இ.போ.ச), கமலாம்பிகை (மணி), பரராஜசேகரம் (உதயன் பணிமனை), அற்புதசேகரம் (நோர்வே) ஆகியோரின் மூத்த சகோதரியும் கந்தசாமி (முன்னாள் உற்பத்தி முகாமையாளர், சீநோர்), பவளராணி (கொக்குவில்), யோகராணி (நோர்வே), தர்மரட்ணம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், RDA, வவுனியா), ஜெயராணி, அமிர்தராணி, பாக்கியத்துரை (சுவிஸ்), அற்புதராணி (நோர்வே), மகாதேவா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் நளாயினி, பாலசுந்தரம் (பாலா கராஜ், சாவகச்சேரி), பாலசிங்கம், கமலாதேவி (பச்சைக்கிளி), அமிர்தலிங்கம் (இ.மி.ச., சாவகச்சேரி), சிவகுமார், கைலா, ஜெகதீஸ்வரன், இந்துமதி ஆகியோரின் அன்பு மாமியும் மேனகா லவேந்திரா, அகிதன், சுதாமினி விக்னேஸ்வரன், தர்மேந்திரா (பல் வைத்தியர், ஆஸ்திரேலியா), சத்தியதீபா நந்தன், அனுராதா சியாமிலன் (AGA அலுவலகம், ஊர்காவற்றுறை), யசிந்தினி, டனுசா சுமுகன், அனுஷா, ஜனகன், பானுகா, வேணுகா, கஜிதன், மதிவன், நிகேதா, நிதூரன், சங்கர், பிரசன்னா, லக்ஷ்மன், மைக், விதூசன், டிஸ்சன், பியோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தேனுகா, விதூசன், அஸ்வின், தர்மினி, சோழன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2007) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கந்தையா துரை (கணவர்)**

### தம்பிராசா மகாலிங்கம்

மானிப்பாயை பிறப்பிடமாகவும் மட்டுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா மகாலிங்கம் நேற்று (13.05.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா - சோதியம்மா தம்பதியரின் அன்பு மகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் சசிகுமார் (சுவிஸ்), சசிகலா (லண்டன்), சசீந்திரா, பானுசா (HNB அஸ்யூரன்ஸ்) ஆகியோரின் தந்தையும் மஜிந்தினி (சுவிஸ்), சந்திரலிங்கம் (லண்டன்), பகீரதன் (சமுர்த்தி அலுவலர், வேலணை) ஆகியோரின் மாமனும் டிசானந், சிபிசானந் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (14.05.2007) திங்கட்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நிணியன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*
தகவல்:
**குடும்பத்தினர்.**

### சதாசிவம் மகாலிங்கம்



புங்குடுதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் மகாலிங்கம் நேற்று (13.05.2007) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் - பத்தினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வரதரெத்தினராசா - பூலோகநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும் சோபனாதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் சத்துருக்கனின் (லண்டன்) அன்புத் தந்தையும் சுலோசனாவின் மாமனும் லூதர்சினியின் பேரனும், தங்கரத்தினம் (கனடா) காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் தனபாலசிங்கம், சிவயோகம் (கனடா), சண்முகலிங்கம், இராமச்சந்திரன் (கனடா) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*92, புங்கன்குளம் வீதி,*
*கொழும்புத்துறை.* (60516)
தகவல்:
**சண்முகலிங்கம் (சகோதரன்).**

## இலங்கை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுவதும், முறிவடைந்து தடைப்படுவதும் பெரும் சிக்கலாக மாறிவிட்டது.

இந்த விடயத்தில் நோர்வே தளராது பணியாற்றி வருவதை நாம் பாராட்டுகின்றோம்; மெச்சுகின்றோம். அவர்கள் தமது அனுசரணைப் பணியை உள்ளார்ந்த அக்கறையுடன் செய்து வந்தனர் -

இலங்கையில் பல வருடங்களாகப் போர் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதனால் அந்நாட்டு விவகாரம் மிக மிக கடினமானதாக மாறிவிட்டது -

இலங்கையில் போரால் பலர் உயிரிழந்துவிட்டனர். அது மிகவும் மோசமானதும் சோகம் நிறைந்ததுமாகும் - கொழும்பு சென்றுள்ள ராஜாங்க உதவி அமைச்சர் ரிச்சர்ட் பௌச்சர் நாடு திரும்பியதும் அமெரிக்கா இதுவிடயமாக ஒரு முடிவை மேற்கொள்ளும் - என்று ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் சியான் மக்கோர் மார்க் கடந்த புதன்கிழமை நடைபெற்ற வாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்துத் தெரிவித்தார். (அ)

## இலங்கைக்கான... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுமாறு இலங்கை அரசை உந்தித் தள்ளும் நடவடிக்கையில் முன்னணிப் பங்கு வகிக்குமாறு ஜப்பானை நாம் வலியுறுத்துகிறோம்'' - என நியூயோர்க்கை மையமாகக் கொண்ட அந்த அமைப்பின் பேச்சாளர் தெரிவித்தார்.

இலங்கையில் மனித உரிமைகள் விவகாரம் மோசமாகி வருகின்றமை குறித்து கடந்த வாரம் இலங்கை வந்திருந்த அமெரிக்காவின் - மத்திய மற்றும் தென்னாசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான - உதவிச் செயலாளர் ரிச்சர்ட் பௌச்சரும் கவலையும், விசனமும் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் -

இலங்கைக்கான உதவித் திட்டங்களை முடக்குவது குறித்து சுவீடனும் ஆராய்ந்து வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

'சீடா' அமைப்பின் மூலம் அல்லாமல் வேறு வழியில் வழங்கப்படும் உதவித் திட்டங்களையே சுவீடன் முடக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் மனித உரிமைகள் பேணப்பட வேண்டும் என்பது குறித்து பல வருடங்களாக முன்னணியில் நின்று வலியுறுத்தி வரும் முக்கிய நாடுகளில் பிரதான இடம் சுவீடனுக்குரியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் இலங்கை அரசுத் தலைமையும் பாதுகாப்பு அமைச்சும் தொடர்ந்தும் விட்டேத்தியாகச் செயற்படுமானால், சர்வதேச அழுத்தம், உதவித் திட்டங்களை முடக்கும் நிலைக்கு அப்பால் வேறு பல வடிவங்களை எடுக்கக் கூடும் என்றும் இராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன. (சி)

## இலங்கையின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். எனினும் இதனை மறுத்துள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சு, இந்திய மீனவர்கள் சுடப்பட்டதாகக் கூறப்பட்ட சமயங்களில் எல்லாம் கடற்படை அதுதொடர்பில் விசாரணைகளை நடத்தியது எனவும் எந்தவொரு சம்பவத்திலும் அத்தகைய சம்பவங்களு டன் இலங்கைக் கடற்படையினர் தொடர்பு பட்டிருக்கவில்லை என்றும் சனிக்கிழமை தெரிவித்திருந்தது.

அத்துடன், பல நூற்றுக்கணக்கில் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைகின்றபோதும் அவர்களை இலங்கைக் கடற்படையினர் மனிதாபிமானத்துடனேயே நடத்துகின்றனர் என்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ்
New **A.A.C**
சுன்னாகம்
வெற்றி நடை போடுகிறது.
2007, 2008, 2009 கலை, வர்த்தக பிரிவுகள்
இ.நாகரிகம் - ரமணன்
அளவையியல் - பிரதீபன்
தமிழ் - சுரேஸ்
நாடகமும் அரங்கியலும்- மங்களேஸ்
அரசியல் - செந்தூரன்
மனைப் பொருளியல் - ரயிதா
புவியியல் - கிருபா
பொருளியல் - பிரபல ஆசிரியர்
கணக்கியல் - பிரபல ஆசிரியர்
வர்த்தகம் - பிரபல ஆசிரியர்

**உங்கள் கணனியில்.....**
அடிக்கடி
* Virus பிரச்சினையா? * Data அழிகிறதா?
* Hard Disk full ஆகிறதா?
இதோ
Data recovery and protection card
SdS கணனிகள் சேவைகள்
25A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
0775332688
021 4590686 0773573049

**தரம் : 5 புலமைப்பரிசில் 2008**
2008ம்ஆண்டு (தற்போது தரம்: 4ல் கற்கும்)
புலமைப்பரிசில் பரீட்சைக்குத்தோற்றும் மாணவர்களுக்கான
இலங்கையின் முன்னணி ஆசிரியர்
திரு.கணேசலிங்கம் அவர்களின்..
வெற்றித்தேர்வு வினாத்தாள்
மாதம் இருமுறை தொடராக அடுத்த வாரம் முதல் நாடுபூராகவும்வெளியாகிறது
பெறவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்க.
021 222 9016, 077 3126807, வடமராட்சி 021 226 3815.
பாடசாலைகள், கல்வி நிறுவனங்களுக்கு விசேட சலுகைகள் உண்டு
2007ம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களுக்கான
வெற்றித்தேர்வு-11

# மரண அறிவித்தல்கள்

### கந்தசாமி சுகந்தராஜ் (நீர்வேலி)

நீர்வேலி வடக்கு, முன்கொடையைச் சேர்ந்த கந்தசாமி சுகந்தராஜ் 12.05.2007 மலேசியாவில் காலமானார்.

அன்னார் வேலணை மேற்கு 8ஆம் வட்டாரம் செல்லத்துரை கந்தசாமி (இராசேந்திரம் பலாங்கொடை)நீர்வேலியைச் சேர்ந்த திருமதி இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும் மோகன்ராஜ் (பிரான்ஸ்), ஆனந்தராஜ் (பிரான்ஸ்), லோகராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் சயந்தினி, நம்மியராணி, வதனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கௌதமராஜ், வினுராஜ், ராம்ராஜ், அசோக்ராஜ், டிலக்ஷன் கம்சிகன், தருண், மானுஜா ஆகியோரின் சித்தப்பாவும் காலஞ்சென்ற செல்லத்துரை பொன்னம்மா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முன்கொடை வீதி,
நீர்வேலி வடக்கு.
தகவல்: **செ.கந்தசாமி (தந்தை),**
**செல்வநாயகம் (சிறிய தந்தை).**

### திருமதி அன்னலெட்சுமி நவரெட்ணம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலெட்சுமி (பாப்பா) நவரெட்ணம் 12.05.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏ.ஆர்.பொன்னம்பலம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகளும் திருமதி கனகம்மா பொன்னம்பலத்தின் பெறாமகளும் நவரெட்ணத்தின் (ஓய்வுபெற்ற ஊழியர், இ.மி.ச.) மனைவியும் ரகுராம் (ஆஸ்தி ரேலியா), ஜெயராம் (இலங்கை மின்சார சபை, வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயும் டாக்டர் வசந்தி (ஆஸ்திரேலியா), தர்சினி ஆகியோரின் மாமியும் கல்யான், ரதீபன் ஆகியோரின் பேர்த்தியும் ராசலெட்சுமி இராசையா (லண்டன்), காலஞ்சென்ற வைத்திலிங்கம், திருமதி விசயலட்சுமி அரசரெட்ணம் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும் பத்மாவவதி வைத்திலிங்கம் (கனடா) காலஞ்சென்ற பார்வதிதேவி நல்லநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவர்.

அன்னாரின் இறுதிகிரியைகள் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் நாளை (15.05.2007) செவ்வாய்க்கிழமை முற் பகல் 10மணிக்கு தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலைஅனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி மேற்கு.
தகவல்:
**சி.நவரெட்ணம்(கணவர்).**

### நடராசா நாகராசா

(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர், காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

காங்கேசன்துறை, மாங்கொல்லையை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா நாகராசா நேற்று (13.05.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துப்பிள்ளையின் மகனாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.05.2007) செவ்வாய்க்கிழமை கல்கிசை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுப்பிட்டி.*
தகவல்:
**ஜெயந்தி, வாசு (மகள், மருமகன்)**

### திருமதி சரவணமுத்து மகேஸ்வரி

பண்டத்தரிப்பு, வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி ச.மகேஸ்வரி (மகேஸ் அக்கா), நேற்று (13.05.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற செல்லப்பா - செல்லம்மா (அளவெட்டி) தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சரவணமுத்துவின் (முன்னாள் அதிபர், முத்துத்தம்பி வித்தியாசாலை, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)அன்பு மனைவியும் நல்லைநாதன், லோகநாதன் (சேர்ச்சில்), மகேஸ்வரன், (மாம்பழம்), தயாபரன், ஹேமவதி (காலஞ்சென்றவர்), சிவயோகி ஆகியோரின் பாசமிகு தாயும் லீலாவதி, மங்களேஸ்வரி, சிவாஜினி, பரா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2007) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு விளாவெளி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''திருமயிலை'',
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.
தகவல்:
**ச.மகேஸ்வரன் (மகன் - மாம்பழம்).**

### செல்லையா கணேசு



ஸ்ரேசன் றோட், கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கணேசு 12.05.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைரவப்பிள்ளையின் சகோதரனும் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும் தமிழ்நேசன் (சுவிஸ்), கலைச்செல்வி (கனடா), வேலழகன் (சமுர்த்தி உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச செயலகம், நல்லூர்), செந்தில்வேல் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலினி (சுவிஸ்), சிறிதரன் (கனடா), ஜானகி, தமயந்தி, ரஜீவ், தனுஜன், நிரோஜன் ஆகியோரின் அன்பு மாமனும் புவியாளன், தமிழினி, கவிந்தன், கவிநிலா, பிரவீன், சர்வீன், ராகவி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான செல்வராஜா, சகுந்தலா மற்றும் சுப்பிரமணியம் பொன்மணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2007) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஸ்ரேசன் றோட்,*
*கோண்டாவில்.* (சி-52412)
தகவல்:
**க.வேலழகன் (மகன்).**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org